# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 15.07.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 9964/SCIC/2024**

திரு I.N. சிட்டிபாபு — மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர், ....... பொதுஅதிகார அமைப்பு
மண்டலம் -5,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.61, பேசின்பாலம் சாலை,
சென்னை 600 021

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 25.05.2024 |
| 2. | மனுதாரரின் மனுவானது சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மாற்றம் | 30.05.2024 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 28.06.2024 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 30.07.2024 |
| 6. | அதன்பின்பு பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 30.08.2024 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 26.05.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை, சென்னை என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 25.05.2024 தேதியிட்டு அனுப்பிய மனுவில் பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை

பணியாளராக (பழைய மண்டலம் - 3, புதிய மண்டலம்-5) பணிபுரிந்து 01.07.0994ல் ஓய்வு பெற்று, 18.10.2016ல் காலமான திருமதி சென்சம்மா என்பவரின் பணிப்பதிவேடு மற்றும் ஓய்வூதியம் சம்பந்தமாக கோப்புகள் மற்றும் மனுக்கள் தொடர்பான ஆவணங்களை சட்டப்பிரிவு 2(j)ன் கீழ் களஆய்வு செய்ய அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார். மனுதாரரின் மனுவானது உரிய தகவல்களை வழங்கும்பொருட்டு சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் 30.05.2024 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர் / செயற்பொறியாளர், மண்டலம் 5, பெருநகர சென்னை மாநகராட்சி, பேசின்பாலம், சென்னை 21 என்ற முகவரிக்கு மாற்றம் செய்யப்பட்டு, அதன் விவரம் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர் சார்பில் திரு P.S. கார்த்திகேயன், கண்காணிப்பாளர், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5, பேசின்பாலம் சாலை, சென்னை ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் மனுதாரருக்கு 30.08.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் துப்புரவு பணியாளர் திருமதி சென்சம்மா என்பவரின் ஓய்வூதியம் தொடர்பான ஆவணங்களை சட்டப்பிரிவு 2(j)ன் கீழ் பார்வையிட அனுமதி கோரியுள்ளார். இன்றைய விசாரணையின்போது மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பான நபரான திருமதி சென்சம்மா என்பவர் மனுதாரரின் உறவினரா என்பது குறித்து ஆணையத்தால் மனுதாரரிடம் கோரப்பட்டது. பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களில் அவர் கோரிய நபரின் பணிப்பதிவேடு மற்றும் ஓய்வூதியம் தொடர்பான தகவல்கள் தங்கள் அலுவலகத்தில் பராமரிப்பில் இல்லையென்று தெரிவித்துள்ளார். இன்றைய விசாரணையின்போதும் பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் அதே தகவல்களையே ஆணையத்தின் முன் எடுத்துரைத்தார்.

4. எனவே, **பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய திருமதி சென்சம்மா, துப்புரவு பணியாளரின் பணிப்பதிவேடு மற்றும் ஓய்வூதியம் தொடர்பான தகவல்கள் தங்கள் அலுவலகத்தில் பராமரிப்பில் இல்லையென்பது குறித்து பிரமாணப்பத்திரம் (Sworn Affidavit) ஒன்றினை 31.07.2026 தேதிக்குள் மனுதாரருக்கு விரைவுத்தபால் மூலம் அனுப்புமாறும், அதன் நகல் ஒன்றினை ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறும் ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

5. பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெறப்படும் பிரமாணப்பத்திரத்தின் அடிப்படையில், மனுதாரர் அவர் கோரிய தகவல்கள் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சியின் உயர்அதிகாரிக்கு உரிய முறையில் மனு செய்து நிவாரணம் பெற்றுக்கொள்ளுமாறு ஆணையத்தால் மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டது.

6. அதனைத்தொடர்ந்து ஆவணங்கள் ஆணையத்தால் பரிசீலனை செய்யப்பட்டநிலையில், மனுதாரரால் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல்

செய்யப்பட்ட மனுவிற்கு மிகவும் காலதாமதமாக பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது தெளிவாகிறது. **எனவே, இனிவரும் காலங்களில் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவிற்குள் தகவல்களை வழங்குவது தொடர்பாக, அச்சட்டத்தின் விதிகளை பொதுத் தகவல் அலுவலர் தவறாமல் பின்பற்றவேண்டும் என்றும், தவறினால் சட்டத்தின் படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 9964/SCIC/2024</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியளார்,
மண்டலம் -5,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.61, பேசின்பாலம் சாலை,
சென்னை 600 021

**மனுதாரர்**

திரு I.N. சிட்டிபாபு,
த/பெ J. நாகேஷ்வராவ்,
எண்.12/6, டாக்டர் அம்பேத்கார் நகர்,
4வது தெரு, C.B. ரோடு,
பழைய வண்ணாரபேட்டை,
சென்னை 600 021

TK/PS